சிவகங்கை பொது விநியோகத் திட்ட துணைப்பதிவாளர் அவர்களின் செயல்முறை ஆணை

பிறப்பிப்பவர் – திரு.பி.குழந்தைவேல், பி.காம்., எம்.பி.ஏ.,

துணைப்பதிவாளர்(பொவிதி), சிவகங்கை

சிவகங்கை மண்டலம்.

ந.க867/2020/பதொ நாள்- 28.02.2022

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன்முறை – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை – சிவகங்கை பொது விநியோகத் திட்ட துணைப்பதிவாளர் அலுவலகம் – இளநிலை உதவியாளர் செல்வி.பா.மகேஸ்வரி என்பாருக்கு 05.08.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை :

1. கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர் நிதி மற்றும் வங்கியியல்-ன் செயல்முறை ஆணை ந.க.11800/2020/பாதொ3(1) மற்றும் 3(2), நாள்-24.07.2020.
2. சிவகங்கை மண்டல இணைப்பதிவாளர் அலுவலக துணைப்பதிவாளர்/பணியாளர் அலுவலரின் செயல்முறை ஆணை ந.க.3037/2020/பதொ, நாள்- 05.08.2020.

*********

பார்வையில் காணும் செயல்முறை ஆணைகளின் படி சிவகங்கை பொது விநியோகத் திட்ட துணைப்பதிவாளர் அலுவலகத்தில் 05.08.2020 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் செல்வி.பா.மகேஸ்வரி, என்பவருக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஆணையிடப்படுகிறது.

| வ.எண் | பணியாளர் பெயர் மற்றும் பதவி | பணியில் சேர்ந்த அலுவலகம் | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்த நாள் |
|---|---|---|---|---|
| 1 | பா.மகேஸ்வரி, இளநிலை உதவியாளர் | துணைப்பதிவாளர்(பொவிதி) சிவகங்கை | 05.08.2020 முற்பகல் | 05.08.2020 முற்பகல் |

<u>நிபந்தனைகள்</u>

1. தனியரது பணிப்பதிவேட்டின்படியும் மற்றும் இவ்வலுவலக ஆவணங்களின்படியும் பணிவரன்முறையினை பாதிக்கும் வகையில் இவர் மீது எந்தவிதமான குற்றச்சாட்டுகளோ அல்லது ஒழுங்கு நடவடிக்கைகளோ ஏதும் இல்லை மற்றும் ஊதியமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

..2..

2. மேற்கண்ட இளநிலை உதவியாளர் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டதை தொடர்ந்து தேர்வாணைய கடிதம் பத்தி 5-இல் குறிப்பிட்டுள்ளபடி டபிள்யூ.பி.தொகுப்பு நான்கு 2018/19 மற்றும் 2019/20ம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு குறித்து சென்னை உயர்நீதி மன்றம் / சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள நீதிப்பேராணை மனுக்களின் தீர்ப்பின் நிபந்தனைக்குட்பட்டு பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

3. இவர் தகுதிகாண் பருவகாலத்தை மூன்றாண்டு கால தொடர்பணியில் தமது இரண்டாண்டு கால பணிக்காலத்தை திருப்திகரமாக நிறைவு செய்திட வேண்டும் எனவும் அக்காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படை பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் என்ற நிபந்தனையுடன் இவ்வாணை பிறப்பிக்கப்படுகிறது.

28/2/22

துணைப்பதிவாளர்(பொவிதி)

சிவகங்கை.

28.02.22

நகல்

1. மண்டல இணைப்பதிவாளர், சிவகங்கைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. செல்வி.பா.மகேஸ்வரி,

   இளநிலை உதவியாளர்